# ரூ.20 லட்சம்!

## கைதான மின்வாரிய தலைமை இன்ஜினியர் வீட்டில் சிக்கியது

## கட்டுக்கட்டாக பணம், பல கோடி மதிப்பு நில ஆவணங்கள் பதுக்கல்

**சென்னை**

மின்வாரிய தலைமை இன்ஜினியர் வீட்டில், லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் நேற்று முன்தினம் இரவு நடத்திய சோதனையில், படுக்கை அறையில் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த, 20 லட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நில ஆவணங்கள் சிக்கியுள்ளன.

சென்னை மாநகர் மின்வாரிய தலைமை இன்ஜினியர்(தெற்கு) சீனிவாசகன் (55). இவர், சில நாட்களுக்கு முன் பள்ளிக்கரணை உதவி பொறியாளர் செல்வம் அலுவலகத்தில் திடீர் சோதனை நடத்தினார். வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கியதில் முறைகேடாக செயல்பட்டதாக கூறி, செல்வத்தை சஸ்பெண்ட் செய்ய, தாம்பரம் செயற்பொறியாளர் மதுசூதனனுக்கு உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் செல்வம் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

சஸ்பெண்ட் செய்யப்பட்ட செல்வம், லஞ்ச ஒழிப்புத்துறை ஐ.ஜி., கனில்குமாரிடம் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

நான் லஞ்ச பணம் வசூலித்து தலைமை இன்ஜினியர் சீனிவாசகனுக்கு கொடுக்கவில்லை. அதனால், என்னை சஸ்பெண்ட் செய்துள்ளனர். என் மீதான நடவடிக்கையை ரத்து செய்து மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள தலைமை இன்ஜினியர், நான்கு லட்சம் ரூபாய் கேட்பதாக, தாம்பரம் செயற்பொறியாளர் மதுசூதனன் என்னிடம் கூறினார்.

என்னிடம் அவ்வளவு பெரிய தொகை இல்லை என கூறினேன். சில நாட்கள் கழித்து, செயற்பொறியாளர் மதுசூதனன் என்னை தொடர்பு கொண்டு, 'சஸ்பெண்ட் ஆர்டரை கேன்சல் செய்ய இரண்டு லட்சம் கொடுங்கள், பிறகு நல்ல வருமானம் உள்ள இடத்திற்கு போஸ்டிங் போட்டவுடன் மீதம் இரண்டு லட்சம் ரூபாய் கொடுங்கள்' என கூறினார். லஞ்சத்தில் புரளும் மின்வாரிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு புகார் மனுவில் கூறியிருந்தார்.




சென்னையில், லஞ்ச வழக்கில் கைதான மின்வாரிய செயற்பொறியாளர் மதுசூதனன் (முகத்தை மூடியிருப் பவர்), மின்வாரிய தலைமை இன்ஜினியர் **சீனிவாசகன்.**

லஞ்ச ஒழிப்புத்துறை எஸ்.பி., லட்சுமி உத்தரவின் பேரில் டி.எஸ்.பி.,கள் நடராஜன், திருநாவுக்கரசு, இன்ஸ்பெக்டர்கள் கஜேந்திரவரதன், குமரகுருபரன், லட்சுமிகாந்தன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

தாம்பரம் செயற்பொறியாளர் மதுசூதனனை தொடர்பு கொண்ட செல்வம், 'முதற்கட்டமாக இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கிறேன். என் மீதான சஸ்பெண்ட் உத்தரவை கேன்சல் செய்து கொடுங்கள்' என கூறினார். கே.கே.நகர் 6வது செக்டாரில் உள்ள தனது வீட்டிற்கு பணத்துடன் வருமாறு மதுசூதனன் கூறினார்.

இரண்டு லட்சம் ரூபாய் நோட்டில் ரசாயன கலவையை, லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் தடவி, செல்வத்திடம் கொடுத்தனர். நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு கே.கே.நகரில் உள்ள செயற்பொறியாளர் மதுசூதனன் வீட்டிற்கு, பணத்துடன் செல்வம் சென்றார்.

வீட்டிற்குள் சென்ற செல்வம், இரண்டு லட்சம் ரூபாயை, மதுசூதனனிடம் கொடுத்தார். பணத்தை பெற்றுக் கொண்ட மதுசூதனன், அங்கிருந்தே தலைமை இன்ஜினியரிடம் பேசினார். பணத்துடன் மின்வாரிய தலைமை அலுவலகத்திற்கு வருமாறு, அவர்களிடம் சீனிவாசகன் கூறியுள்ளார்.

கே.கே.நகர் வீட்டில் இருந்து மதுசூதனன் அவரது காரில், செல்வத்தை அழைத்துக் கொண்டு அண்ணாசாலையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகத்திற்கு புறப்பட்டுச் சென்றார். லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார், அவர்கள் சென்ற காரை பின்தொடர்ந்து சென்றனர்.

மின்வாரிய தலைமை அலுவலகத்திற்குள் சென்ற மதுசூதனன், தலைமை இன்ஜினியரிடம் இரண்டு லட்சம் ரூபாயை கொடுத்தார். வெளியே மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார், செயற்பொறியாளர் மதுசூதனன் மற்றும் தலைமை இன்ஜினியர் சீனிவாசகனை கைது செய்தனர்.

தலைமை இன்ஜினியரின் அறையில் போலீசார் சோதனை நடத்தினர். அன்றைய தினத்தில் வசூலான லஞ்ச பணம், ஒரு லட்சத்து 22 ஆயிரம் ரூபாயை பறிமுதல் செய்தனர். சீனிவாசகனின் வீடு மேற்கு மாம்பலத்தில் உள்ளது. சீனிவாசகனின் மனைவி டாக்டர் பரமேஸ்வரி. இவர்களது மகளை சிங்கப்பூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளனர்.

வீட்டில் நடத்திய சோதனையில் 22 லட்சம் ரூபாய் ரொக்கம் சிக்கியது. இது தவிர பல கோடி ரூபாய் மதிப்புள்ள 34 சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சீனிவாசகன் அவர் பெயரிலும் அவரது உறவினர்கள் பெயரிலும் 20 வங்கி கணக்குகள் துவக்கியிருந்தார். அந்த விவரங்களை போலீசார் சேகரித்துக் கொண்டனர்.

அதில், நான்கு வங்கி கணக்குகளில் இருந்த இருப்பு, 20 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக இருந்தது. வீட்டில் இருந்த அசையும் மற்றும் அசையாத பொருட்களின் பட்டியலை சேகரித்த போலீசார், அதில் கைது செய்யப்பட்ட சீனிவாசகனிடம் கையெழுத்து பெற்றனர்.

அதே போல் கைது செய்யப்பட்ட செயற்பொறியாளர் மதுசூதனன் வீட்டிலும் போலீசார் சோதனை நடத்தினர்.

நேற்று காலை கீழ்ப்பாக்கத்தில் உள்ள முதன்மை செஷன்ஸ் நீதிபதி தேவதாஸ் வீட்டில் சீனிவாசகன், மதுசூதனனை ஆஜர்படுத்தினர்.

அவர்களை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து இருவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

### மாதம் ரூ.30 லட்சம்

கைது செய்யப்பட்ட மின்வாரிய தலைமை இன்ஜினியர் சீனிவாசகன் அறையில் இருந்து, ஒரு நாள் வசூல் பணம் ஒரு லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் சிக்கியது. தலைமை இன்ஜினியருக்கு கீழ், கண்காணிப்பு பொறியாளர்கள்(எஸ்.சி.,), செயற்பொறியாளர்கள்(டி.இ.,), உதவி பொறியாளர்கள்(ஏ.இ.,) என ஏராளமானோர் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர், தலைமை இன்ஜினியருக்கு வார, மாத 'கட்டிங்' கொடுத்தது போலீஸ் விசாரணையில் வெளிச்சத்து வந்துள்ளது. கைதான தலைமை இன்ஜினியர், மாதம் 30 லட்சத்திற்கும் குறையாமல் 'கட்டிங்' பெற்று வந்ததாக தெரிகிறது.

தலைமை இன்ஜினியர் கைதால், மின்வாரிய தெற்கு பிரிவில் பணியாற்றும் நேர்மையான அதிகாரிகள் சந்தோஷமடைந்துள்ளனர். கைதான அதிகாரிக்கு, 'கட்டிங்' வசூலித்து கொடுத்த அதிகாரிகள் கலக்கமடைந்துள்ளனர்.

### 'மெப்ஸ்'சில் லஞ்சம்

தாம்பரம் அருகே, 'மெப்ஸ்' வளாகத்தில் பல தொழில் நிறுவனங்கள் செயல்படுகின்றன. அதில், சி.டி.எஸ்., என்ற நிறுவனத்திற்கு நேற்று முன்தினம் உயர் மின்னழுத்த மின் இணைப்பு கொடுத்ததற்கு (எச்.டி.,) ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றுள்ளனர்.

அத்தொகையை தாம்பரம் செயற்பொறியாளர் மதுசூதனன் பெற்று, தலைமை இன்ஜினியர் சீனிவாசகனிடம் கொடுத்துள்ளார்.

தலைமை இன்ஜினியரின் அறையில் இருந்த அந்த பணம் மற்றும் வேறொருவரிடம் வாங்கிய லஞ்சம் 22 ஆயிரம் சேர்த்து ஒரு லட்சத்து 22 ஆயிரத்தை போலீசார் பறிமுதல் செய்தனர்.

### முன்பே சிக்கினார்

கைதான சீனிவாசகம், தென் மாவட்டத்தில் உதவி இன்ஜினியராக பல ஆண்டுகளுக்கு முன்பு பணியாற்றிய போது, லஞ்சம் வாங்கிய வழக்கில் சிக்கினார். பல ஆண்டுகள் போராடி அவ்வழக்கில் இருந்து வெளியே வந்தார். தற்போது இரண்டாவது முறையாக லஞ்ச வழக்கில் சிக்கியுள்ளார்.

கைதான மின்வாரிய அதிகாரி, பெண்கள் விஷயத்தில் அதிக ஆர்வம் கொண்டவர். அலுவலகத்தில் பணியாற்றும் பெண்கள் பலரிடம் அதிக உரிமை எடுத்து பழகியுள்ளார். அலுவலகம் தவிர, சினிமா வட்டாரத்தில் நடிகைகள், துணை நடிகைகளிடம் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. இதற்கு, மின்வாரியத்தில் பணியாற்றும் சில அதிகாரிகள் உடந்தையாக இருந்த தகவல் வெளியாகியுள்ளது.